# வெற்றிக்கு வழி - தமிழ் விடைக்குறிப்பு

## 12ஆம் வகுப்பு – பொதுத் தமிழ்

### பகுதி – I (மதிப்பெண்கள் - 14)

1. ஆ) நிலவுப் பூ
2. ஈ) இசைக்கருவி
3. இ) தலைக்கோலி
4. ஆ) எட்டு நாடுகள்
5. அ) கிறித்தவமும் தமிழும்
6. அ) திருவருட்பா
7. இ) வினைத்தொகை
8. ஆ) உத்தம சோழன்
9. அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.
10. இ) காவியம்
11. அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
12. இ) ஈறுபோதல், இனமிகல்
13. ஆ) குறியீடு
14. ஆ) இரண்டு

### பகுதி – II (மதிப்பெண்கள் - 24)

#### பிரிவு – 1

15. மாலை நேர சூரியன் போல, சிவந்த, நோகும் கைகளையுடைய தொழிலாளர்களின் **திரண்ட தோள்மீது இருக்கும் வியர்வை வெள்ளத்தை** வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் கவிஞர் சிற்பி.

16. விலங்குகள் குளிர்மிகுதியால் **மேய்ச்சலை மறந்தன**. குரங்குகள் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் **நிலத்தில் வீழ்ந்தன**. பசுக்கள் பாலுண்ண வந்த **கன்றுகளைத் தவிர்த்தன**.

**17.**

| வசனம் | கவிதை |
|---|---|
| எதுகை மோனை சேர்க்காமல், **அடியளவை அறிந்திடாமல்** வடிவமைப்பது வசனம் எனப்படும். | எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம் முதலிய **யாப்பிலக்கண நெறிகளுக்கு உட்பட்டு** வடிவமைக்கப்படுவது கவிதை எனப்படும். |

18. யானை தனித்து சென்று வயலில் புகுந்து உண்ணுமாயின் அதன் **வாயில் புகுந்த நெல்லைவிட அதன் கால்களில் மிதிபட்டு** அழிந்த நெல்லின் அளவு அதிகமாகும்.

#### பிரிவு – 2

19. ***புக்கில்*** : கணவன் மனைவி ஆகிய இருவரும் தற்காலிகமாகத் தங்கும் இடம்
***தன்மனை*** : திருமணத்திற்குப் பின் கணவன் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம்.

20. ***சென்னையை அலங்கரித்த ஆறுகள்:*** கொற்றலையாறு, கூவம், அடையாறு, பாலாறு

21. ***பின்னணி இசை:*** திரைப்படத்தின் **உணர்வுகளை வெளிக்கொணர** உதவும். பாத்திரங்களின் மனக்கவலைகள், அலைக்கழிப்புகள் ஆகியவற்றை எதிரொலிக்கும்; எடுத்துக்காட்டும். பாத்திரங்களின் **உணர்வுகளுக்கு விரிவுரை** வழங்கும்.
***சான்று*** : கதை நாயகி சன்னல் வழியாகத் தலையை நீட்டி வெளியே தெரியும் ஒரு காட்சியை வெறித்துப் பார்க்கிறாள் எனில் தெரு காட்டப்படுவதில்லை.

#### பிரிவு – 3

22. அ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.
ஆ) வீட்டினருகே விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை, தந்தை எங்கே அழைத்துக் கொண்டு சென்றார்?

23. அ) அவன் **முன்வந்து** கூறினான்.
**அவன்முன்** வந்து கூறினான்.
ஆ) **விழுந்துதானே** எழுந்தாள்.
**விழுந்து தானே** எழுந்தாள்.

24. **தின்மை** மிகுந்த விலங்கிடமிருந்து **திண்மை** மிகுந்தோன் தப்பித்துக்கொள்வான்.
(தின்மை – தீமை; திண்மை – வலிமை)

25. அ) பனை ***ஓலையில்*** கூரை ***வேய்ந்திருந்தனர்.***
ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் ***குருளையையும்*** யானைக்***கன்றையும்*** கண்டேன்.

26. அ) தலைவனை விபத்தில் இழந்த குடும்பம் ***அச்சாணி இல்லாத தேர் போல*** நிலைகுலைந்தது.
ஆ) இராமுவும் கந்தனும் ***நகமும் சதையும் போல*** வாழ்ந்தனர்.

27. அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை**ப்** பொறுத்திருக்கிறது.
ஆ) புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த கவனம் அறிவை**ப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை**த்** தேவையாகும்.

| | |
|---|---|
| 28. **அ) அமர்ந்தனன்** = அமர்+ த்(ந்)+ த் + அன்+ அன்<br>அமர் - பகுதி<br>த் - சந்தி, ந் ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>அன் - சாரியை<br>அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி | **ஆ) செய்த** = செய் + த் + அ<br>செய் - பகுதி<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி |

| 29. | அ) எத்திசை | ஆ) செந்தமிழே |
|---|---|---|
| | **பிரித்தல்:** எ + திசை | **பிரித்தல்:** செம்மை + தமிழே |
| | **விதி:** இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் எத்திசை என்றானது. | **விதிகள்:** 1. ஈறுபோதல்<br>2. முன்னின்ற மெய் திரிதல் |
| | **விளக்கம்:** நிலைமொழியில் உயிரீறு (எ) இயல்பாய் வந்துள்ளதால், இவற்றின் முன் உள்ள வல்லின எழுத்தான தகரம் மிகுந்து வந்துள்ளது. | **விளக்கம்:** 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று 'மை' விகுதி கெட்டு செம் + தமிழே என நின்றது. 'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி நிலைமொழி மகரமெய் 'ந்' ஆகத் திரிந்து செந்தமிழே என்றானது. |

**30.** ஈரசைச்சீர்கள் இரண்டு வகைப்படும். அவை
1. மாச்சீர் (தேமா, புளிமா) 2. விளச்சீர் (கருவிளம், கூவிளம்)

## பகுதி – III (மதிப்பெண்கள் - 28)

### பிரிவு – I

31. WTS *Guide pg.no:* 356
32. WTS *Guide pg.no:* 259
33. ♣ **அதியமான்:** அதியமான் கடையெழு வள்ளல்களில் ஒருவர்.
   ♣ **ஆண்ட பகுதி:** அதியமான் (அதிகமான் நெடுமான் அஞ்சி) 'தகடூர்' என்றழைக்கப்பட்ட தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்.
   ♣ **அதியமான் ஈகைப்பண்பு :** நறுமணம் கமழும் பெரிய மலைச்சாரலில் இருந்த அழகுமிக்க நெல்லிமரத்தின் கனி, உயர் நிலைபெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையுடையது. அது தனக்குக் கிடைக்கப்பெற்றபோது, அதனை (தான் உண்ணாமல்) ஔவைக்கு வழங்கியவன் அதிகன் என்னும் வள்ளல் ஆவார்.
   ♣ **சிறுபாணாற்றுப்படையின் எடுத்துக்காட்டு:** *"கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி*
   *அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கு ஈந்த...."*
34. WTS *Guide pg.no:* 209

### பிரிவு – II

35. WTS *Guide pg.no:* 28
36. WTS *Guide pg.no:* 48

***37. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சிகள்:***

1. **ஆங்கிலேயரின் வருகை:**
   நடந்து செல்லும் பாதைகளாகவும் மாட்டுவண்டிகள் சென்றுகொண்டிருந்த பாதைகளாகவும் இருந்தவையெல்லாம் ஆங்கிலேயரின் குடியிருப்புகளை முன்னிட்டுச் சாலைகளாக மாறின.
2. **தரைவழி போக்குவரத்தின் வளர்ச்சி:**
   அண்ணாசாலைக்கு (மவுண்ட் ரோடு) அடுத்ததாக மதராசப்பட்டினத்தின் மற்றொரு முக்கியமான சாலை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையாகும். இராயபுரம் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை மத்தியத் தொடர்வண்டி நிலையம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம் ஆகியன உருவாயின.
3. **நீர்வழி போக்குவரத்து வளர்ச்சி:**
   19ஆம் நூற்றாண்டில் சென்னைத் துறைமுகம் பெரும் பெரும் வளர்ச்சியடைந்தது.
4. **வான்வழி போக்குவரத்து வளர்ச்சி:**
   உலக நாடுகளைத் தமிழகத்துடன் இணைக்கும் பன்னாட்டு விமான நிலையமும் மிகப்பெரும் வளர்ச்சியடைந்தது. இவ்வாறாக ஆங்கிலேயிரின் வருகைக்கு பின்னர் சென்னை நகரின் போக்குவரத்து மாபெரும் வளர்ச்சியை எட்டியது. (Book P*g.no:* 109, 110)

38. WTS *Guide pg.no:* 301

**பிரிவு – 3**

39. WTS *Guide pg.no:* 371 (அல்லது) WTS *Guide pg.no:* 371

40. WTS *Guide pg.no:* 125

41. ♣ **அம்மூவனார்:**

அம்மூவனார் சங்காலத்தில் வாழ்ந்த புலவர் ஆவார். இவர் நெய்தல் திணையைப் பாடுவதில் வல்லவர். இவர் அகநானூற்றுப்பாடல்களில் பாடிய பாடல்களில் தலைமகன் பாங்கற்கு கூறிய செய்திகள் இடம்பெற்றுள்ளது.

♣ **தலைமகன் பாங்கற்கு உரைத்தது:**

◆ **உள்ளுறை உவமம்:**

வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியது போல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன் என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறைத்துக் கூறினான்.

◆ **விளக்கம்:**

- உப்பினை விற்பதற்காக தெருவில் கூவிக்கொண்டு சென்ற பெண்ணை வேற்றுக்குரலென்று நாய் குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல மருண்டன. அதனை தலைவன் கண்டான்.
- அப்பெண்ணுடைய தந்தையின் உப்பு ஏற்றிச்செல்லும் வண்டி கருஞ்சேற்றில் சிக்கிக் கொண்டது. சிக்கிக்கொண்ட வண்டியை, சேற்றிலிருந்து மீட்க முயன்ற எருதிற்கு அவள் தந்தை உதவி செய்தார்.
- அதுபோல, தலைவியைக் கண்டதால் ஏற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன் என்று தலைமகன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறுவது உள்ளுறை உவமமாகும்.

42. அ) WTS *Guide pg.no:* 130

ஆ) ***பொருள் : ஒற்றுமையுடன் வாழ்ந்தால் பல நன்மைகள் உண்டாகும்***

**வாழ்வியல் நிகழ்வு :**

**கூடி வாழ்ந்தால் கோடி நன்மை**

எங்கள் ஊரில் ஒரு வயதான தந்தைக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள். அதனால் மனம் வருந்திய தந்தை அவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என்று எண்ணினார். ஒருநாள் நான்கு மகன்களையும் அழைத்து, ஒற்றுமையாக இருக்கும் படி அறிவுரை கூறினார். பிள்ளைகளோ, ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொண்டனர். தந்தை மிகவும் வருத்தப்பட்டு, இவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

மறுநாள், தன் பிள்ளைகளை அழைத்து நான்கு மகன்களின் கைகளிலும் ஒரு குச்சியினைக் கொடுத்து அதனை உடைக்கும் படியாகக் கட்டளையிட்டார். நான்கு பிள்ளைகளும் சுலபமாக உடைத்தெறிந்தனர். மறுபடியும் இரண்டுக் குச்சிகளைக் கொடுத்து உடைக்கும் படியாகக் கட்டளையிட்டதும் சுலபமாக உடைத்தனர்.

இதேபோன்று மூன்று குச்சிகள், நான்கு, ஆறு, பன்னிரண்டு, இருபத்து நான்கு என கூடுதலாக்கிக் கொண்டே செல்லச் சிரமத்திற்குள்ளாயினர். கடைசியாக ஒரு கட்டாக அவர்களின் முன்பு வைத்து அதனையும் உடைக்கும்படியாகக் கூறினார். நான்கு மகன்களும் உடைக்க முயன்று முடியாமல் தங்களின் கைகளைக் காயப்படுத்திக் கொண்டனர். தங்களால் உடைக்க முடியவில்லை என ஒப்புக்கொண்டனர்.

தந்தை சிரித்துக்கொண்டே,"நீங்களும் இதேபோல் தனித்தனியாக இருக்கும் போது பகைவர்கள் உங்களைச் சுலபமாக வென்று விடுவார்கள். அவ்வாறில்லாமல் நீங்கள் நால்வரும் ஒற்றுமையாக இருந்தால் யாராலும் அசைக்க முடியாத பலம் உங்களுக்குள் வரும். உங்களை எதிர்ப்பவர்களோ காயப்பட்டுச் செல்வார்கள்" எனக் கூறினார். இதனைக்கேட்ட நான்கு பிள்ளைகளும் தங்களின் தவறுகளை உணர்ந்து, தந்தையினிடத்தில் மன்னிப்பு கேட்டு எப்பொழுதும் ஒற்றுமையாகவே இருக்க உடன்பட்டனர். தந்தை மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

**நீதி : ஒருமையை விலக்கி வைப்போம்! ஒற்றுமையில் விலகாதிருப்போம்!**

43. WTS *Guide pg.no:* 175

**பகுதி – IV (மதிப்பெண்கள் - 18)**

*44.* அ) WTS *Guide pg.no:* 118 ஆ) WTS *Guide pg.no:* 302, 303

45. அ) நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் கண்ணுக்கினியாள், காவியா, புகழேந்தி ஆகிய நாங்கள் சூற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நடத்திய பயனுள்ள கலந்துரையாடலை பற்றி கீழே விரிவாக காணலாம்.

➔ **நிலத்தின் வளம் அழிந்து போக காரணம் - நெகிழி**

முதலில் கண்ணுக்கினியாள் பசுமைதாசனாரை வரவேற்று பேசினார். அவள் ஆற்றிய உரையில் நம் முன்னோர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளை பிரித்து எவ்வாறு வாழ்க்கை நடத்தினர் என்பதை சிறப்பாக கூறினாள். மேலும் சங்க காலத்தில் நிலத்தின் சிறப்போடு தோன்றிய இலக்கிய இலக்கணங்களின் சிறப்பையும் எடுத்துரைத்தாள். ஆனால் தற்போது பழம்பெருமை வாய்ந்த நிலத்தின் நிலை மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது குறித்தும், நிலத்தின் இயற்கை வளம் அழிந்து போனதற்கான காரணம் குறித்த வினாக்களையும் பசுமைதாசனாரிடம் முன்வைத்தாள்.

கண்ணுக்கினியாளின் வினாக்களுக்கு பசுமைதாசனார் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார். “நெகிழியை பயன்படுத்துதே பலவிதமான மாறுதல்களுக்கும், பேரழிவுகளுக்கும் காரணமாக விளங்குகிறது. இயற்கையானது மனித வாழ்விற்கு நன்மையைத் தருவதாகவும் பாதுகாப்பாகவும் மட்டுமே இருந்துள்ளது அவற்றைச் சீரழித்ததன் விளைவாகவே நாம் இன்று பேரிடர்களைச் சந்தித்து வருகிறோம்” என்றவாறு பசுமைதாசனார் பதிலளித்தார்.

➔ **நெகிழியால் ஏற்பட்ட பாதிப்புகள்:**

இரண்டாவதாக காவியா நெகிழி பற்றி தனக்கேற்பட்ட சந்தேகங்களை முன் வைக்கிறாள். நெகிழி என்னும் அரக்கன் பொது வாழ்வில் வந்த பின் மக்கள் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவிற்கு அழிவுகளைச் சந்திக்க நேரிட்டதன் காரணம் என்ன? என தன் வினாவை பசுமைதாசனாரிடம் பகிர்ந்து கொண்டாள்.

காவியா கேள்விக்கு பசுமைதாசனார் பின்வருமாறு பதிலளித்தார். “காய்கறி விற்பனையாளர்கள் முதல் பெரிய வணிக நிறுவனங்கள் வரை நெகிழியை பயன்படுத்துகின்றனர். நாளுக்கு நாள் நெகிழியின் பயன்பாடு அதிகமாவதால் தெருக்கள், பூங்காக்கள், கடற்கரைகள் எங்கு பார்த்தாலும் நெகிழியால் நிறைந்தது அதனை எரிப்பதினால் காற்று நஞ்சாகிறது என பசுமைதாசனார் காவியாவுக்கு பதிலளித்தார்.

➔ **நெகிழியை தவிர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்**

இறுதியாக புகழேந்தி தனது கேள்விக் கணைகளை தொடுத்தான். ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழிப்பைகளை முறையாக அப்புறபடுத்தாவிட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றிய தனது சந்தேகத்தை பசுமைதாசனாரிடம் ஆர்வத்துடன் கேட்டான்.

புகழேந்தியின் கேள்விக்கு பசுமைதாசனார், “நெகிழி பல ஆண்டுகளாக மட்காமல் இருப்பதோடு மண்ணையும் மலடாக்கி விடுகிறது. மழைநீரைப் பூமிக்குள் செல்லவிடாமலும் தடுக்கிறது. நெகிழி பயன்பாட்டை தவிர்த்தால், பூமியின் நிலத்தடி நீர்மட்டம் உயரும். மரங்கள் செழித்து வளர்ந்து, சுத்தமான காற்றைத் தரும் என என பசுமைதாசனார் நெகிழி பயன்பாட்டை தவிர்தது நிலத்தின் ஆயுளை அதிகரிக்க வேண்டும் என அனைத்து மாணவர்களிடம் கலந்துரையாடிய நிகழ்வு மிக விழிப்புணர்வு மிக்கதாய் இருந்தது.

ஆ) WTS *Guide pg.no:* 261

***46. அ)*** WTS *Guide pg.no:* 128

**ஆ)** ➔ **நடிகர் திலகம் சிவாஜி கணேசன் - அறிமுகம்:**

கம்பீரத் தோற்றம், கண்ணியத் தோரணை, கர்வம் கொண்ட கூரிய பார்வை இவற்றின் அடையாள திகழ்பவர் வி.சி. கணேசன் என்ற ‘சிவாஜி கணேசன்’ அவர்கள் ஆவார். அவர் தன் துடிப்பான நடிப்பாற்றல் திறனால், உலகமெங்கும் பரவியிருக்கும் தமிழரின் மனங்களில், செதுக்கிய எழுத்துக்களாக இன்றும் இருக்கின்றார்.

➔ **சிவாஜி கணேசன் அவர்களின் பிறப்பு:**

சிவாஜி கணேசன் (அக்டோபர் 1, 1928 - சூலை 21, 2001) புகழ் பெற்ற தமிழ் திரைப்பட நடிகர் ஆவார். இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள வேட்டைத்திடல் என்ற கிராமத்தலி பிறந்தவர். இவரின் பெற்றோர்கள் சின்னையா, இராஜாமணி அம்மாள் ஆவர். இவரது இயற்பெயர் விழுப்புரம் சின்னையா மன்றாயர் கணேசமூர்த்தி ஆகும். இவர், பராசக்தி என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானார்.

➔ **நடிப்புலகத்தின் சக்கரவர்த்தி – சிவாஜி கணேசன்**

நடிப்புலகத்தின் சக்கரவர்த்தி என எல்லோரும் வியக்கின்ற மகத்தான நடிகர் சிவாஜிகணேசன் அவர்கள் ஆவார். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கு உயிர் அளித்துத் தன் வசனத்தாலும் உடல் அசைவுகளாலும் உருட்டுவிழி நகர்வாலும் காண்பவர்களைக் கட்டிப்போட்டுவிடுகின்ற கலைஞர். நவரச உணர்வுகளைத் தன் முகக் குறிப்புகளாலும் உடல் மொழிகளாலும் சிறப்பாக வெளிப்படுத்தி நடித்த மகா நடிகன். இத்தகைய சிறப்புகளைப் பெற்றுத் தமிழ்த் திரையுலகின் அடையாளமாக விளங்கும் செவாலியே சிவாஜி கணேசன் பற்றி அறிவது நடிப்புக்கலையைப் பற்றி அறிவதாகும்.

➔ **சிவாஜி கணேசன் அவர்கள் நடிகர்களுக்கு திலகம்:**

- கணேசன் என்ற சிவாஜி கணேசன் தன திறமையால் தமிழ் தாயை தமிழாக, அழகாக பேசி தமிழ் தாயின் ஆசியோடு தன் முதல் படத்திலேயே சாதனை படைத்தார்.
- நமது அன்னை தமிழின் உயிர் அதன் நாடி எங்கெங்கு உள்ளதோ அந்த இடங்களையெல்லாம் சுண்டி விட்டு படம் பார்க்கும் திறம் அவருக்கே உரியது.
- செந்தமிழை, உரைநடை தமிழை எவ்வளவு லாவகமுடன்......ல..ள..ர..ற...ழ ...உச்சரிப்பை வசன வார்த்தைகளுக்கேற்ற உரைத்தவர்.
- அவருடைய முகபாவம், வார்த்தைகேற்றவாறு கேசம் கூட ஆடவைக்கும் அந்த தலை அசைப்பு, ஆணித்தரமாக வாதிடும்போது தானாக வரும் அந்த வலதுகை, தங்கைபற்றி, குடும்பத்தைப்பற்றி பேசும்போது தேக்கி வைத்திருக்கும் கண்ணீரை வெளியே கொண்டு வந்திருக்கிறார்.
- ராஜராஜ சோழனை பற்றி வரலாற்றில் குறிப்பிட்டிருப்பதை போல நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, தந்தையின் கனிவு கொண்ட கண்கள், அதே நேரம் அரசவையில் கம்பீர தோற்றம், தவறு செய்பவர்களை பார்வையால் தண்டிக்கும் திறமும், ஒருங்கே பெற்ற ஒரு நடிகன் தமிழ் திரை உலகில் யார்? என்ற கேள்வி எழும்போதெல்லாம் எந்த சந்தேகங்களுக்கும் இடம் கொடுக்காமல் அனைவரும் ஒருமித்த குரலில் உரைப்பது திரை உலக சித்தர் நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் தான் என்பதை வீடறியும், நாடறியும், தமிழர்கள் உள்ள புவி அறியும்.
- இவ்வாறாக அனைத்து நவரசங்களையும் ஒருங்கே கொண்டிருக்கும் சிவாஜி கணேசன் அவர்களுக்கு “நடிகர் திலகம்” எனும் பட்டம் பொருத்தமானதே ஆகும்.

## பகுதி – V (மதிப்பெண்கள் - 6)

47. அ) **கம்பராமாயணம்**

துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்

- கம்பர்

**பாவகை : கலி விருத்தம்**

**ஆ) செயல் என முடியும் குறள்**

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

- திருவள்ளுவர்